மெட்ரோ ரெயில் பணிக்காக போக்குவரத்தில் மாற்றம்

# கோடம்பாக்கம் ஆற்காடு ரோடு நாளை ஒருவழிப் பாதையாகிறது

## கோயம்பேட்டில் இருந்து வரும் வாகனங்கள் வடபழனி சந்திப்பில் நேராக செல்ல முடியாது

சென்னை, ஆக. 16–

கோடம்பாக்கம் பவர் அவுஸ் சந்திப்பில் இருந்து போரூர் சந்திப்பு வரை ஆற்காடு சாலையில் மெட்ரோ ரெயில் 2–ம் கட்ட பணிகள் தொடங்க உள்ளதையொட்டி நாளை (17–ந் தேதி) காலை 6 மணி முதல் இரவு 10 மணிவரை ஒருநாள் மட்டும் பரீட்சார்த்த முறையில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக சென்னை மாநகர போலீசார் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:–

போரூர் மார்க்கத்தில் இருந்து கோடம்பாக்கம் மேம்பாலம் செல்லும் வாகனங்கள் வழக்கம் போல் ஆற்காடு சாலையில் செல்லலாம்.

ஆற்காடு சாலையில் 80 அடி சாலை சந்திப்பில் இருந்து கோடம்பாக்கம் பவர் ஹவுஸ் சந்திப்பு வரை ஒருவழி பாதையாக மாற்றப்பட உள்ளது.

போரூர்

கோடம்பாக்கம் மேம்பாலம் மார்க்கத்தில் இருந்து சாலி கிராமம், போரூர் நோக்கி செல்லும் வாகனங்கள் ஆற்காடு சாலையில் பவர் ஹவுஸ் சந்திப்பில் இடதுபுறம் திரும்பி அம்பேத்கார் சாலை, அசோக்நகர் 2–வது அவின்யூ சாலை, பி.டி.ராஜன் சாலை, ராஜமன்னார் சாலை, 80 அடி சாலை வழியாக ஆற்காடு சாலை செல்லாம் மற்றும் வன்னியர் சாலை வழியாக விருகம்பாக்கம் செல்லலாம்.

கோடம் பாக்கம் மேம் பாலத்தில் இருந்து வடபழனி சந்திப்பிற்கு செல்ல வேண்டிய வாகனங்கள் ஆற்காடு சாலையில் பவர் ஹவுஸ் சந்திப்பில் இடதுபுறம் திரும்பி அம்பேத்கர் சாலை, அசோக்நகர் 2–வது அவின்யூ சாலை, ஜவஹர்லால் நேரு 100 அடி சாலை வழியாக வடபழனி சந்திப்பை அடையலாம்.

போரூர் மார்க்கத்தில் இருந்து கே.கே.நகர் செல்லும் வாகனங்கள் 80 அடி சாலையில் வலதுபுறம் திரும்பி ராஜமன்னார் சாலையில் இடதுபுறம் திரும்பி பி.டி.ராஜன் சாலை, ராஜமன்னார் சாலை சந்திப்பில் வலதுபுறம் திரும்பி கே.கே.நகர் காவல் நிலையம் வழியாக கே.கே.நகர், உதயம் செல்லலாம்.

அசோக் பில்லர் மார்க்கத்தில் இருந்து கோடம்பாக்கம் மேம்பாலம் நோக்கி செல்லும் வாகனங்கள் அம்பேத்கர் சாலையில் அசோக்நகர் காவல் நிலையம் சந்திப்பில் இடதுபுறம் திரும்பி அசோக் நகர் 2–வது அவின்யூ சாலை, ஜவஹர்லால் நேரு 100 அடி சாலை, ஆர்காடு சாலை வழியாக கோடம்பாக்கம் மேம்பாலம் செல்லலாம்.

வடபழனி சந்திப்பில் இருந்து தியாகராயநகர் நோக்கி செல்லும் வாகனங்கள் துரைசாமி சாலை சந்திப்பில் வலதுபுறம் திரும்பி துரைசாமி சாலை, 2–வது அவின்யூ சாலை, நேராக 8–வது தெரு, 3–வது அவின்யூவில், இடதுபுறம் திரும்பி 4–வது அவின்யூ சந்திப்பு வழியாக தியாகராயநகர் செல்லலாம்.

கே.கே.நகர்

கே.கே.நகரில் இருந்து பிடி.ராஜன் சாலை வழியாக வரும் வாகனங்கள் ராஜமன்னார்–பி.டி.ராஜன் சாலை சந்திப்பில் வலதுபுறம் திரும்பி ஜவஹர்லால் நேரு 100 அடி சாலை, 2–வது அவின்யூ செல்ல அனுமதி இல்லை, மாறாக இடதுபுறம் திரும்பி ராஜமன்னார் சாலை, 80 அடி சாலை வழியாக ஆற்காடு சாலை சென்றடையலாம்.

வன்னியர் தெருவில் இருந்து ராஜமன்னார் சாலையில் வரும் வாகனங்கள் நேரே செல்ல அனுமதி இல்லை. மாறாக 80 அடி சாலை வழியாக ஆற்காடு சாலை சென்று செல்ல வேண்டிய இடத்திற்கு செல்லலாம் அல்லது முனுசாமி சாலை வழியாக கே.கே. நகர், உதயம் வழியாக செல்லாம்.

கோயம்பேடு

கோயம்பேடு மார்க்கெட்டில் இருந்து வடபழனி மேம் பாலம் சர்வீஸ் சாலையில் வரும் வாகனங்கள் வடபழனி சந்திப்பில் நேராக செல்ல அனுமதி இல்லை. வழக்கம் போல இடதுபுறம் திரும்பி ஆற்காடு சாலை சென்று துரைசாமி சாலை வழியாக அசோக் பில்லர் நோக்கி நேராக செல்லலாம்.

சாலி கிராமத்தில் இருந்து கோடம்பாக்கம் நோக்கி செல்லும் வாகனங்கள் ஒரு வழி பாதையில் வரும்போது பேருந்து மற்றும் வணிக வாகனங்கள் சாலையின் இடதுபுறம் ஓடுதளத்திலும், இலகுரக வாகனங்கள் மற்றும் இருசக்கர வாகனங்கள் அனைத்தும் சாலையின் வலதுபுற ஓடுதளத்தில் செல்ல வேண்டும். கனரக வாகனங்கள் மற்றும் வணிக வாகனங்கள் சாலையின் வலதுபுற ஓடுதளத்தில் செல்லக்கூடாது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.